# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

AIBEA - AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை - 600 001
தொலை பேசி : 044-25358718, 9444058718 மின்அஞ்சல் : ubeutn@gmail.com


சுற்றறிக்கை எண்:122:2019 08.04.2019

<u>சென்னை பிராந்திய கிளைகளுக்கு:</u>

அன்பார்ந்த தோழர்களே !

## <u>சங்கத்தின் 46 ஆண்டு நிறைவு விழா</u>

சென்னை, கோவை, மதுரை ஆகிய இடங்களில் இயங்கிய சங்கங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு, தமிழகம் முழுமைக்குமான அமைப்பாக நமது சங்கம் உருவான நாள் 22 ஏப்ரல் 1973. வரும் ஏப்ரல் 22ஆம் நாள் நமது அமைப்பு 46 ஆண்டுகளை நிறைவுசெய்து, 47ஆம் ஆண்டில் காலடி எடுத்துவைக்கவுள்ளது.

பிராந்திய அளவில் அனைத்து தோழர்களும் கலந்துகொள்ளும் வகையில் ஒரு விழா நடத்தப்படவேண்டும் என்ற ஆவலின் காரணமாக வரும் 21.04.2019 அன்று சென்னையில் ஒரு விழாவிற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. சென்னை பிரதான கிளை முன்பாக 23.04.2019 அன்று ஒரு இரத்த தான முகாமிற்கும், இலவச கண் பரிசோதனை மற்றும் சர்க்கரை நோய் கண்டறியும் முகாமிற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

கடந்த 03.04.2019 அன்று நடைபெற்ற சென்னை நகர நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் 46வது ஆண்டு நிறைவு விழா குறித்து விவாதிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு விழாவை சிறப்பாகக் கொண்டாடுவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது:

இடம் : A.K.நாயக் பவன், எண்.14, இரண்டாவது கடற்கரைச் சாலை, சென்னை - 600 001
(கனரா வங்கி ஊழியர் சங்க அரங்கம், தலைமை தபால் அலுவலகம் பின்புறம், கடற்கரை ரயில் நிலையம் முன்பு)

நாள் : 21.04.2019 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம் : காலை 10 மணி

உணவு : மதியம் 1.30 மணியளவில்

46 ஆண்டு நிறைவு விழாவை அனைத்து உறுப்பினர்களும் குடும்பத்துடன் கலந்துகொண்டு சிறப்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் உறுப்பினர்களும், அவர்களது குடும்பத்தாரும் தங்களது திறமைகளை வெளிக்காட்டிட வாய்ப்புகள் வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அனைவரும் கலந்துகொள்ளும் வகையில் பாட்டு, நடனம், விளையாட்டுகள், Quiz, Table Topic போன்றவைகளை நடத்திடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நமது வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தி, நமது வாழ்வு சிறக்க பாடுபடும் தொழிற்சங்கம் தனது 46வது ஆண்டு நிறைவை கொண்டாடும் இத்தருணத்தில், நமது தோழர்கள் அனைவரும், தங்கள் குடும்பத்துடன் அந்த நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

தோழமை வாழ்த்துக்களுடன்,

(அ.சிதம்பரம்)
பொதுச் செயலாளர்

இந்த விழாவில் தங்களது மற்றும் தங்கள் குடும்பத்தினரின் திறமைகளை வெளிப்படுத்த விரும்பும் தோழர்களும், பிற நிகழ்வுகளில் கலந்துகொள்ள விரும்பும் தோழர்களும், அந்த விவரங்களை கீழ்க்கண்ட தோழர்களிடம் 16.04.2019க்கு முன்பாக தெரிவிக்கவேண்டுகிறோம் :

| | |
|---|---|
| தோழர். A.முகம்மது சலீம் | : 9444635551 |
| தோழர். E.நாகேந்திரன் | : 9444912053 |
| தோழர். M.G.சுரேந்தர் | : 9003183829 |
| தோழர். D.ராஜேஷ்குமார் | : 7708285161 |